**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.1250/2021

வா.சா.1 கணேசன், த/பெ பெரியசாமி

**குறுக்குவிசாரணை 3வது பிரதிவாதி தரப்பில்:-**

தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் எனக்கு 3ம் பிரதிவாதி கணேசனுக்குமிடையே நடைபெற்ற வாய்மொழி பாகப்பிரிவினையின்படி பிரிந்த சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் எனக்கு பரிபூரண முறையிலும், தாவா 5 அயிட்ட சொத்து பாதை இருவருக்கும் பொதுவில் என்றும் முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில் பெரியசேமூர் அ கிராமம் ரீ.ச.எண்.44/16B, 44/11, 44/9 ஆகிய பூமிகள் முழுவதும் அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்தை பாதையாக பயன்படுத்தவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இன்றுவரை தாவா 5வது அயிட்ட சொத்து பாதையாக பயன்படுத்தப்பட்டுவருகிறது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சொத்துக்களுக்கு செல்ல தாவா 5வது அயிட்ட பாதை மட்டும் தான் வழி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிரிடை கோரிக்கை மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு தான் தாவா 5வது அயிட்ட சொத்து பாதை உள்ளது என்றால் சரிதான். அதில் உள்ளவாறு தான் அளவுகளும் உள்ளது என்றால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்தை பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் படியும், எதிரிடை கோரிக்கை மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தின்படியும், அத்துக்கல் நடுவதில் எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. நான் எனது வழக்குரையில் தாவா 5வது அயிட்ட சொத்தின் அளவுகளை தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பரிவினையானது கடந்த

13.02.2003 தேதியில் வாதி, 2 மற்றும் 3 பிரதிவாதிகள், எனது தாயார் வள்ளியம்மாள் எனது சித்தப்பா முத்துசாமி ஆகியோர்களுக்கிடையே வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் எனது தாயார் வள்ளியம்மாள் அவரது பாகத்தினை அவரது இரண்டு மகன்களுக்கும் விட்டுக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்து பாதை பயன்படுத்தும் பாத்தியத்தை பொறுத்து எங்களது குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை எழுதிக்கொள்ளலாம் என்றும், அதை ஒரு சொத்தாக பாவித்து பாகப்பிரிவினை செய்யமுடியாது என்றால் சரிதான். 3வது பிரதிவாதிக்கு தாவா 5வது அயிட்ட சொத்தில் பாதி பாத்தியம் உரிமை இருப்பதைப் பொறுத்து 3வது பிரதிவாதிக்கு தீர்ப்பாவதில் எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. தாவா 5வது அயிட்ட சொத்து கூட்டாக இருப்பதால் அந்த சொத்தை பொறுத்து மட்டும் நான் கேட்டுள்ள பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிரிடை கோரிக்கை மனுவை அனுமதிப்பதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**